# பத்திரிக்கைச் செய்தி

## நர்சரி மான்யம் வழங்குவதற்காகா ரூ.20,000/- லஞ்சம் கேட்டு பெற்ற உதவி இயக்குநர் கைது

புகார்தாரர் திரு.தேகதீஸ்வரன், க.எண்.29/8, பூச்சக்காடு, கூனவேலம்பட்டி புதுார், இராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரருக்கு பூர்விகமான 4 1/2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது, இதில் 2 1/2 ஏக்கர் நிலத்தில் மல்பெரி நடவு செய்து பட்டு பூச்சி வளர்ப்பு தொழில் செய்து வருகிறார். பட்டு பூச்சி வளர்ச்சி தொழில் தொடர்பான நுட்ப வேலைகளை அறிய இவருடைய பகுதியில் உள்ள பட்டு வளர்ச்சி அலுவலர் திருமதி.கீதா அவர்களை சந்தித்து சந்தேகங்களை கேட்டுள்ளார். அப்போது பட்டு வளர்ச்சி அலுவலர் திருமதி.கீதா அவர்கள் மல்பெரி கன்றுகளை ஒரு ஏக்கர் நடவு செய்தால் ரூ.1,20,000/- மான்யமாக அரசு வழங்கும் என்றும் மேலும் மல்பெரி செடிகளை விற்பனை செய்யும் பணம் உங்களுக்கான லாபம் எனவும் கூறியுள்ளார். அதன்படி புகார்தாரர் மேலும் ஒரு ஏக்கர் நிலத்தை சரி செய்து மல்பெரி நடவு செய்துள்ளார். அதனை பட்டு வளர்ச்சி அலுவலர் பார்வையிட்டு சென்றார். பின்னர் புகார்தாரர் மல்பெரி செடிகள் வளர்ந்தவுடன் அந்த மல்பெரி நாற்றுகளை பட்டு வளர்ச்சி துறை அலுவலர்கள் மூலமாக நாற்று ரூ.2/- வீதம் விற்பனை செய்துள்ளார். இதன் பின்னர் பட்டு வளர்ச்சி துறை மூலமாக கிடைக்கும் மான்யம் பெறுவதற்காக புகார்தாரரின் தந்தை செங்கோட்டையன் விண்ணப்பித்திருந்தார். இவ்விண்ணப்பத்தினை கடந்த 06.11.2023 பார்வையிட்ட திருமதி.கீதா, பட்டு வளர்ச்சி அலுவலர் நர்சரி மான்யம் பெறுவது சம்பந்தமாக நாமக்கல் மாவட்ட பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் அவர்களை சந்திக்குமாறு அறிவுறுத்தினார். இதன் பிரகாரம் கடந்த 07.11.2023ம் தேதி புகார்தாரர் உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் அவர்களை சந்தித்துள்ளார். அப்போது திரு.முத்துபாண்டியன், உதவி இயக்குநர் அவர்கள் உங்களுடைய கோப்பானது தயாராக உள்ளது எனவும் இக்கோப்பினை இயக்குநர்

அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் எனவும், மேலும் உங்களுக்கு கிடைக்கும் மான்யத்தில் தனக்கு 25 சதவீதம் கமிசனாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். புகார்தாரர் மான்யம் கிடைக்க ஏற்பாடு செய்ய கூறியுள்ளார். அப்போது உதவி இயக்குநர் திரு.முத்துபாண்டியன் இக்கோப்பினை இயக்குநருக்கு அனுப்பிவைப்பதாகவும், பணம் வந்தவுடன் சொல்கின்றேன், அப்போது வந்து தன்னை பார்க்குமாறு கூறி அனுப்பியுள்ளார். பின்னர் 18.12.2023ம் தேதி புகார்தாரர் திரு.முத்துபாண்டியன், உதவி இயக்குநர் அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்தபோது நர்சரி மான்ய பணம் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து வந்து விட்டதாகவும், ஏற்கனவே சொல்லியிருந்தபடி தனக்கான 25 சதவீத கமிசன் தர வேண்டும் என கேட்டுள்ளார். புகார்தாரர் தான் நிறைய செலவு செய்துள்ளதாகவும் எனவே கமிசனை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார், உடனே திரு.முத்துபாண்டியன், உதவி இயக்குநர், தனக்கு லஞ்சமாக ரூ.20,000/- தர வேண்டும் எனவும் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 19.12.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.முத்துப்பாண்டியன், உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.20,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.